Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞ புரட்டாதி மீ 23 வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 4 (09-10-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 276

பெண்களுக்கான
றெடிமேட் நவீன
ஆடைகள்
அன்பளிப்புப் பொருட்கள்
அனைத்தும்

லாலா
என்ரபிறைசஸ்
29, நவீன சந்தை
சுன்னாகம்

ஜப்பான் நாட்டின் தொழில்நுட்ப வியலாளரின் நேரடிக் கண்காணிப்பில்
கொழும்பில் பிரதிகள் செய்யப்படும்
கலர்ப் புகைப்படப் பிரதிகள்
(பிரதி 5/- கட்டுக்)
சகலவிதமான கலர்ப் பட கருவிகள் சகாய விலையில்

லாலா
என்ரபிறைசஸ்
29, நவீன சந்தை,
சுன்னாகம்

வெலிக்கடைப் படுகொலைகள் (1983)

# கைதிகளைப் பாதுகாக்க அரசு தவறியதால் நஷ்டஈடு வழங்க வேண்டும்

## வழக்கு விசாரணையின்போது டெஸ்மண்ட் பெர்னாண்டோ வாதம்

கொழும்பு, அக்டோபர் 9

1983 ஜூலையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில், தமது பாதுகாவலில் இருந்த தமிழ்க் கைதிகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் தவறிவிட்டது.

அரசாங்கத்தின் இச்செயலால் பலர் உயிரிழந்துள்ளனர்.

அநியாயமாகப் பலியான இவர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்க வேண்டும்.

இவ்வாறு பிரபல மனித உரிமைகள் வழக்கறிஞரான திரு டெஸ்மண்ட் பெர்னாண்டோ கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வாதம் புரிந்தார்.

1983 ஜூலையில் இடம்பெற்ற வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலையில் உயிரிழந்த தமிழ் இளைஞர்களில் 39 பேரின் சார்பில் தலா 2 லட்சம் ருபா நட்டஈடு கோரி அவர்களின் உறவினர்கள் தாக்கல்செய்த வழக்குகளில் இரண்டு நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு வந்தன.

படுகொலையில் உயிரிழந்த பொன்னையா இராசதுரையின் தாயார் திருமதி பொன்னையா தாக்கல் செய்த வழக்கு விசாரணைக்கு முதலில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி திரு டெஸ்மண்ட் பெர்னாண்டோ நீதிமன்றத்தில் வாதாடினார்.

தனது பாதுகாவலில் இருந்த தமிழ்க் கைதிகளைப் பாதுகாக்க அரசாங்கம் தவறிவிட்டது. அரசாங்கத்தின் இச்செயலால் பலர் உயிரிழந்துள்ளனர். அநியாயமாகப் பலியான இவர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்க வேண்டும்—என்று அவர் வாதத்தின்போது தெரிவித்தார்.

இரண்டாவது விண்ணப்பதாரரின் சார்பாக பிரபல சட்டத்தரணி திரு. நிமால் சேனநாயக்க ஆஜரானார்.

இரண்டு வழக்குகளும் மேல்விசாரணைக்காக அக்டோபர் 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன. "இந்த இரண்டு வழக்குகளும் முதலில் விசாரிக்கப்படும். இவற்றில் வழங்கப்படும் தீர்ப்பு ஏனைய வழக்குகளை அமுல்படுத்தும் செல்லுபடியாகும்"—இப்படி மேலதிக மாவட்ட நீதிபதி திரு ஏ. டபிள்யு குணரத்தின நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சட்டமா அதிபரிடம் இருந்து தலா 2 லட்சம் ரூபா நஷ்டஈடு கோரியே உயிரிழந்தவர்களின் உறவினர்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (ஆ-எ)

### பேலும் ஆறுயிரம் பொலிஸார்

கொழும்பு, அக் 9

மேலும் ஆறுயிரம் பொலிஸாரைத் திரட்ட பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி 31-12-1986

(இ-ஐ-எ)

### 11 பேர் கொலை

புதுடில்லி, அக் 9

பீகாரில் தீவிரவாதிகள் நேற்று பதினொரு பேரைக் கொலை செய்தார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

# சிப்பாய்கள் நேற்றும் வெளியே வர முயற்சி

யாழ்ப்பாணம், அக். 9

புளொட் போராளிகளின் தாக்குதலினால் யாழ் கோட்டை முகாம் பொறுப்பதிகாரி ஒருவரின் கார் சேதமடைந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ் கோட்டை முகாமிலிருந்து கவசவாகனங்கள், டிரக்குகள், கார் சகிதம் சிப்பாய்கள் வெளியேற முற்பட்டனர்.

பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள பாலத்திற்கு அருகில் இவர்களது வாகனங்கள் வந்ததும் புளொட் போராளிகள் கடும் தாக்குதல் நடத்தினர்.

இதனை அடுத்துக் கவசவாகனத்தில் இருந்த சிப்பாய்களும் பதில் தாக்குதல் நடத்தினர்.

போராளிகள் குண்டுகளை வெடிக்க வைத்தனர்.

பதினொரு மணி வரை வெளியே நின்ற சிப்பாய்கள் போராளிகளின் தாக்குதலை அடுத்து முகா (4ஆம் பக்கம் பார்க்க)

### தடுப்புக் காவல் இளைஞர்களைக் கொண்டு பற்றைகளை வெட்டுவித்தனர்

யாழ்ப்பாணம், அக். 9

யாழ் கோட்டைக்குள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் சிலர் நேற்று கோட்டைக்கு வெளியே சிப்பாய்களினால் கூட்டி வரப்பட்டனர். பின்னர் அவர்களைக் கொண்டு பற்றைகள் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டது.

பொலிஸ் நிலையம், கடற்கரை வீதி ஆகிய பகுதிகளில் உள்ள பெரிய பற்றைகளே வெட்டித் துப்புரவு செய்யப்பட்டன.

இதேவேளை கொறிப் பாஸ் பெறச் சென்ற சிலரும் சிப்பாய்களினால் தடுத்து வைக்கப்பட்டு பற்றைகளை வெட்டப் பணிக்கப்பட்டனர். (இ-10)

# போராளிகள் தமது சொந்த யோசனைகளைச் சமர்ப்பிப்பர்

புதுடில்லி, அக் 8

இனப்பிரச்சினை தொடர்பான அடுத்த பேச்சுவார்த்தையில் போராளிகள் அமைப்புகள் கலந்து கொண்டு இனப் பிரச்சினைத் தீர்வுக்கான தமது சொந்த யோசனையைத் தெரிவிக்கும்.

இவ்வாறு போராளிகள் தரப்பில் தெரிவிக்கப்படுவதாக பி.பி.சி நேற்று இரவு அறிவித்தது.

சமரசத் திட்டம் ஒன்றுக்கு போராளிகளை இணங்க வைக்கும் முயற்சியில் தாம் ஈடுபட்டிருப்பதாக தமிழ் நாடு முதலமைச்சர் எம் ஜி ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பான அடுத்த பேச்சுவார்த்தை அடுத்த மாதம் நடுப் பகுதிக்குப் பின்பே ஆரம்பமாகும் என இருப்பது தெரிந்ததே.

அடுத்த மாத முற்பகுதியில் பெங்களூரில் சார்க் அமைப்பு மாநாடு நடப்பதே இதற்குக் காரணம் ஆகும். (இ)

## ஒற்றுமைக்காக முயற்சித்து வருகிறோம் என்கிறார் பத்மநாபா

சென்னை, அக். 9

அனைத்து விடுதலை அமைப்புகளின் ஒற்றுமைக்காக நாம் முயற்சித்து வருகிறோம்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிப் பிரமுகர் பத்மநாபா சென்னையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போர்க்களத்தில் இலங்கை இராணுவத்தைத் தாக்குவதில் அமைப்புகளிடையே ஒற்றுமை உண்டு. இது ஒரு திட்டமிட்ட ஒற்றுமை அல்ல.

திட்டமிட்ட ஒற்றுமை இன்று அமைப்புகள் (4ஆம் பக்கம் பார்க்க)

திருமலையில்

## தேடி அழிக்கும் நடவடிக்கையை இலங்கை அரசு நிறுத்த வேண்டும்

### ராஜீவிடம் கூட்டணி கோரிக்கை

சென்னை, அக். 8

இந்திய உதவியுடனான அர்த்தமுள்ள பேச்சுக்கள் தொடரவேண்டுமானால், திருமலை மாவட்டத்தில் 'தேடி அழிக்கும்' இராணுவ நடவடிக்கைகளை இலங்கை அரசு நிறுத்தவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல்குழு, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை கூட்டணியின் அரசியல் குழு சென்னையில் கூடி, திருமலை நிலைமை குறித்து விரிவாக ஆராய்ந்தது.

இலங்கை இராணுவம் திருமலையில் தமிழரைத் தேடி அழிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளது.

அர்த்தமுள்ள பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் இந்திய முயற்சி வெற்றி பெறவேண்டுமானால் தேடி அழிக்கும் (4ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு கிழக்கில்

## வெளிநாட்டவரின் நடமாட்டத்தை அரசு கண்காணிக்கும்

கொழும்பு அக். 9

தொண்டர் ஸ்தாபனங்களில் சேர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணிபுரியும் வெளிநாட்டவரின் நடமாட்டங்களை இலங்கை அரசு தீவிரமாகக் கண்காணிக்க இருக்கின்றது.

தீவிரவாதிகளுக்கு இவர்கள் விரும்பியோ விரும்பாமலோ நிதி உதவி செய்கின்றார்கள் (4ஆம் பக்கம் பார்க்க)

கோட்டையில் இருந்து துப்பாக்கிச் சூடு

யாழ்ப்பாணம், அக் 9

கடற்கரை வீதி, பாலஸ் வீதி, பிரதான வீதி ஆகியவற்றினூடாக குறிப்பிட்ட அளவு தூரத்தில் செல்லும் வாகனங்கள் மீது கோட்டையில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுகிறது.

கடற்கரை வீதியூடாகச் சென்ற ஐஸ் பழ வானின் மீது நேற்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

சூடுபடாதபடியால் வான் தப்பித்துக் கொண்டது. (இ-10)

வெளிநாடுகளில்

## லக்ஷ்மி நாகநாதன் தலைமையில் தமிழீழம் பற்றிய பிரசாரம்

நியூயோர்க், அக். 8

தமிழீழம் பற்றி உலக நாடுகளில் மேற்கொள்ளப்படவுள்ள இராஜதந்திரப் பிரசாரத்துக்கு முன்னாள் ராஜதந்திரி செல்வி லக்ஷ்மி நாகநாதன் தலைமை வகிப்பார்.

தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும் இரும்பு மனிதர் என வர்ணிக்கப்பட்டவருமான டாக்டர் இ எம் வி. நாகநாதனின் புதல்வி செல்வி லக்ஷ்மி நாகநாதன் ஆவார்.

இந்த ஆண்டு முடிவில் புதுடில்லியில் திறக்கப்படவிருக்கும் முதலாவது தமிழீழ தொடர்பு நிலையத்தில் பொறுப்பதிகாரி (4ஆம் பக்கம் பார்க்க)

அறிவித்தல்

[பெயர் மாற்றம்]

கடந்த பல காலங்களாக "Intersun Group" என்ற பெயரில் பிரயாண ஒழுங்குகளை மேற்கொண்டுவந்த எமது ஸ்தாபனம் 08 10 86 (புதன்கிழமை) தொடக்கம்

"Gloria Travels"

எனும் புதிய பெயருடன் இயங்கும் என்பதை சகலருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

ஆத்திமோட்டையில் இராணுவ முகாம்:

# 50 முஸ்லிம் குடும்பங்கள் திருமலை வந்தன

திருகோணமலை அக் 9

சுமார் 50 முஸ்லிம் குடும்பங்கள் நேற்று அகதிகளாகத் திருமலை நகரை வந்தடைந்தன.

இவர்கள் நிலாவெளியில் இருந்தூர் என்னும் இடத்தில் வாழ்ந்து வந்தவர்கள்.

ஆத்திமோட்டைத் தமிழ்ப் பாடசாலையில் ஆயுதப்படையினர் முகாம் ஒன்றைத் திறந்ததைத் தொடர்ந்தே முஸ்லிம் குடும்பங்கள் வெளியேறின.

அப்பகுதியில் ஆயுதப் படையினரின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் பயந்து வாழவேண்டியுள்ளது. அதனால் தான் வெளியேறினோம்—இப்படி அவர்கள் தெரிவித்தனர்.

அந்த நேரத்தில் அப்பகுதியில் கைது செய்யப்பட்ட 36 முஸ்லிம்கள் இன்னும் படையினரால் விடுவிக்கப்படவில்லை.

இதனிடையில் நிலாவெளிக் கிராமத்தில் இருந்தும் பெரும்பாலான தமிழர் அச்சம் காரணமாக முல்லைத்தீவு நோக்கிச் செல்கின்றனர்.

(இ எ 150)

தெல்லிப்பளைப் பகுதியில்

## ஹெலி தாழப்பறந்து வட்டமிட மக்கள் பதற்றம்

பலாலி, அக்டோபர் 9

நேற்றுப் பகல் 11-30 மணியளவில் தெல்லிப்பளைப் பகுதியில் ஹெலிகொப்டர் ஒன்று தாழப் பறந்து வட்டமிட்டு ரோந்து சுற்றியது.

வழமைக்கு மாறாக நடைபெற்ற இந்த ரோந்து நடவடிக்கை சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது.

குரும்பசிட்டி, கட்டுவன், தெல்லிப்பளை கிழக்கு, ஏமாமை வடக்கு, மயிலிட்டி தெற்கு பகுதிகளில் இதனால் பதற்றம் நிலவியது.

சில பாடசாலைகள் நேரத்தோடு மூடப்பட்டு மாணவர்கள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

ஹெலி திரும்பிவிட நிலைமை வழமைக்குத் திரும்பியது. (இ-119)

முச்சந்தி முனி




வெளிநாட்டுக்காரர் வடக்கு கிழக்குக்கு வந்தால் இஞ்சினை நடக்கிற அரச பயங்கரவாதம் பற்றி உண்மை நிலையை வெளியாலை சொல்லிப் போடுவினம் என்ட பயம் தான் சரியான காரணம்.. ஆருக்கோ தெரியாதே !

வீரகேசரி யாழ். கிளை

## முகாமையாளர் மின்சாரம் தாக்கி அகால மரணம்

கன்னாகம், அக் 9

'வீரகேசரி' பத்திரிகையின் யாழ் மாவட்டக் கிளையின் முகாமையாளர் திரு வே. ஸ்ரீஸ்கந்தா அகால மரணமானார்.

சுன்னாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் செவ்வாய்க்கிழமை இரவு ஏற்பட்ட மின் ஒழுக்கினால் தாக்குண்டு அவர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

மின் ஒழுக்குக் காரண (4ஆம் பக்கம் பார்க்க)

### விரிவுரையாளர் கொலை பற்றி விசாரணை

கொழும்பு, அக் 9

தலவாக்கலை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. கே. பத்மநாதனின் மரணம் குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி நுவரெலியா கல்விப் பணிப்பாளருக்கு கல்வி அமைச்சு நேற்று உத்தரவிட்டது.

இதனிடையில் இச்சம்பவம் காரணமாக தலவாக்கலையில் பதற்றம் நிலவியதாகவும் அதைத் தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

(இ-ஐ-எ)

### முகமூடி தலையாட்டி 9 பேர் கைது

திருகோணமலை, அக் 9

நேற்று பிற்பகல் முகமூடி நபர் தலையாட்டியதைத் தொடர்ந்து சாம்பல்தீவு தேவாலயத்தில் (4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

9—10—1986

வியாழக்கிழமை

சுப நேரம்
7. 32 முதல் 9 02 வரை

ராகுகாலம்:
1. 32 முதல் 3 02 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஷஷ்டி விரதம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்திய முதல் யாழ் வாசி அரச அதிபரைச் சந்தித்தார்

யாழ்ப்பாணம், அக் 9

ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்தப்பட்ட முதல் யாழ்ப்பாணத் தமிழரான மாதகலைச் சேர்ந்த எஸ். பரமகுமார் எனும் 18 வயது இளைஞன் யாழ் அரச அதிபரை சென்று சந்தித்தார்.

1982 ஆம் ஆண்டு மாமரத்திலிருந்து தவறி விழுந்ததால் இவருக்கு ஒரு கால் பாதிக்கப்பட்டு முழங்காலுடன் அகற்றப்பட்டது.

'நோருட்' ஸ்தாபனத்தின் உதவியால் கொழும்பு சென்று மூன்று நாட்கள் தங்கியிருந்து, பயிற்சிகள் பழக்கப்பட்டு, ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்தப்பட்டது.

மாதகலைச் சேர்ந்த திருமதி அந்தோனிப்பிள்ளை இவருடன் கொழும்பு சென்று இவருக்கான சகல உதவிகளையும் செய்திருந்தார்.

ஊன்று கோலின் உதவியின்றி சொந்தக் காலில் நின்றதையிட்டு தனது மகிழ்ச்சியையும், தமது வாழ்க்கைக்கு இப்படியான ஒரு வரப்பிரசாதத்திற்கு உதவியவர்களுக்கு தமது நன்றியையும் பரமகுமார் அரச அதிபரிடம் தெரிவித்தார். (இ-5)

## தன் நலன்பாராது பிறர் நலனுக்காக சேவை செய்தவர்

### பிரிவுபசார விழாவில் பாராட்டு

கன்னாகம், அக்.9

அரச ஊழியர்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று மக்களின் நலனுக்காக தமது நலன்களுக்கு இடையூறு ஏற்படினும் சிறப்பாகச் சேவை செய்யும் ஊழியர். இரண்டு சம்பளத்துக்கு வேலை செய்யும் ஊழியர், மூன்று எவரது நலனுக்காகவும் சேவை செய்யாது பதவியை துஷ்பிரயோகம் செய்யும் ஊழியர். இதில் திரு இராமலிங்கம் முதலாவது பிரிவைச் சேர்ந்தவர்.

கன்னாகம் பிரசைகள் குழு தலைவர் திரு. இ. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கன்னாகம்பட்டணசபையில் 14 ஆண்டுகள் சேவை புரிந்து வவுனியாவுக்கு பதவி உயர்வுடன் இடமாற்றமாகிச் செல்லும் திரு இ. இராமலிங்கத்துக்கு கன்னாகம் மக்கள் நடத்திய பிரிவுபசார விழாவுக்கு தலைமை வகித்த திரு. மாணிக்கவாசகர் பேசினார்.

உதவி அரச அதிபர் திரு. ஆ. ..லிங்கம் பேசுகையில் மக்களுக்கு சேவை செய்பவர்கள் என்றும் மதிக்கப்படுபவர்கள் என்பதற்கு இவ்விழா நல்ல சான்றாகும் என்றார்.

திரு சி. இராமலிங்கம் நன்றி தெரிவித்துப் பேசுகையில் மக்கள் ஒத்துழைப்பு கிடைக்கும் போதுதான் எந்த அரச ஊழியராலும் சிறந்த சேவையாற்ற முடியும் என்ற உண்மையை எனக்கு சுன்னாகம் மக்களாகிய நீங்கள் போதித்தீர்கள் என்றார்.

திரு.சபா.புஷ்பநாதன் வரவேற்புரையுடன் ஆரம்பமான பிரிவுபசார விழாவில் பட்டின சபை முன்னாள் உறுப்பினர்களான வைத்தியக் கலாநிதி ஆ. நடராஜா, திரு. எம். மருதலிங்கம் திரு. ஆ. ஹென்றி, ஆசிரியச் திரு சின்னத்தம்பி, யாழ் மாவட்ட ..ஆபி சபையின் செயலாளர் திரு பதமநாதன், கன்னாகம் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு சி. குமாரவேல் கன்னாகம் அதிகாரமளிக்கப் பட்ட உத்தியோகத்தர் திரு. எஸ். கந்தசாமி உட்பட பலர் பேசினர். திரு எஸ். துரைராசா நன்றி தெரிவித்துப்பேசினர்.(இ-27)

## இன்றும் என்றும் பெருமை தருவது சென் ஹென்றீஸ்

இளவாலை, அக் 9

இன்றும், என்றும் எங்களுக்கு பெருமையைத் தருவது சென். ஹென்றீஸ் கல்லூரி.

இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரிப் பழைய மாணவர்கள் வருடாந்த மதிய போசன வைபவம் அண்மையில் நடைபெற்றது.

அதில் உரையாற்றிய ஆங்கில விற்பன்னரும் ஆசிரியருமான திரு சி. மனுவேற்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

கழகக்காப்பாளர் கல்லூரி அதிபர் அருள்திரு ஏ. ஜே. இராஜநாயகம் அடிகளின் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

திரு. சி. மனுவேற்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் எங்கள் ஆசிரியர்கள் ஆங்கிலத்தை அதிக அக்கறையாக ஊட்டியதால்தான் பழைய மாணவர்களாகிய நாம் இலங்கையில் மாத்திரமல்ல மலேசியா, பர்மா, சிங்கப்பூர், அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் பெரும் பதவிகள் வகித்திருமே என்றார்.

வேலணை மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு மு சிவராசரத்தினம் தமது உரையில்; சென் ஹென்றீஸ் ஆங்கில மொழியில் மாத்திரமல்ல கணிதம் தமிழ் நாகரிகம், ஒழுக்கம் உதைபந்தாட்டம் என்பனவற்றிலும் பெரும் பணி செய்துள்ளது.

பழைய மாணவர்கள் கல்லூரிக்குக் கூடிய உதவி புரிய முன்வர வேண்டும்.'' என்றார்.

கழகச் செயலர் திரு. எஸ். சந்தையா நன்றியுரை கூறினார். (இ-48)

GLORIA TRAVELS

● கனடா ● டென்மார்க்
● பிரான்ஸ் ● ஜெர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்

டென்மார்க், கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும்

பாஸ்போர்ட், பொண்ட் (BOND), விசா, ரிக்கற்

ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

### மக்கள் முகம்

## மல்லாகம் விழிப்புக் குழு

சுன்னாகம் அக் 9

மல்லாகம் விழிப்புக் குழுவின் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு கடந்த வாரம் நடைபெற்றது.

பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு இ கதிர்காமலிங்கம், செயலாளர்: திரு. த நடராசா, உபதலைவர்: திரு மு சின்னத்துரை, உப செயலாளர்: திரு பெ. தனராஜா, பொருளாளர்: திரு மு. தனபாலசிங்கம்.

செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்: நா. கதிர்காமநாதன், இ. இராசரத்தினம், க. வேலாயுதபிள்ளை, வ. ரவீந்திரன், வ தங்கராசா, கா. சோமசுந்தரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-27)

## கோண்டாவில் கிழக்கு விழிப்புக்குழு

யாழ்ப்பாணம் அக் 9

கோண்டாவில் கிழக்கு கிராமசேவகர் பிரிவின் (36ஏ) விழிப்புக்குழு நிர்வாகக்குழு விபரம் வருமாறு;

தலைவர்: திரு. து சிவசுந்தரம் உபதலைவர்: திரு ம இராசேந்திரன் செயலாளர்: திரு. கா. சிவப்பிரகாசம் உபசெயலாளர்: திரு ச குலசிங்கம் பொருளாளர்: திரு. பொ பாலசிங்கம்.

உறுப்பினர்கள்: க கதிர்காமராஜா, ச சண்முகராசா, க இரத்தினசிங்கம், அ. யோகராசா (இ-எ)

## ஓய்வூதியம் பெறும் இடத்தை மாற்றுமாறு பலர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், அக் 9

யாழ் தபால்கந்தோர் மூலம் ஓய்வூதியம் பெற்று வந்தோரில் பலர் தமது ஓய்வூதியம் பெறும் இடங்களை மாற்றும்படி கோருகின்றனர்.

இது தொடர்பான விண்ணப்பங்கள் யாழ் செயலக ஓய்வூதியப் பிரிவில் வந்து குவிகின்றன.

செயலக உத்தியோகத்தர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

கிராமிய வங்கிகளுக்கு தமது ஓய்வூதியக் கொடுப்பனவுகளை மாற்றும்படி கோரும் விண்ணப்பங்களே இவை ஆகும்.

மாதாந்தம் 500 க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் இவ்விதம் வருகின்றன.

சென்ற மாதம் நடைபெற்ற கொடுப்பனவுக் கெடுபிடிகளால் தற்போது அதிகளவு விண்ணப்பங்கள் வருகின்றன.

இவற்றை உடன் கவனித்து ஆவன ஒழுங்குகள் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ-9)

## அழிப்பது சுலபம் ஆக்குவது கஷ்டம்

### நிறைவு விழாவில் உரை

வட்டுக்கோட்டை, அக் 9

எதனையும் அழிப்பது சுலபம் ஆனால் ஆக்குவது தான் கஷ்டம். ஆரம்பிக்கப்பட்ட சங்கத்தை அழிய விடாது காப்பாற்றுவது அங்கத்தவர்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச்சங்க 88 ஆவது வருடாந்த நிறைவு விழா சித்தன்கேணி மாதர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

தலைமையுரை நிகழ்த்திய சகாய நிதிச்சங்கத் தலைவர் திரு.செ கந்தசாமி மேற்கண்டவாறு கூறினார்.

திரு செ கந்தசாமி தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:-

அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் மாணவர் இலாபத்தை சம்பாதிப்பதில் இதுவரை அங்கத்தவர்களின் நன்மைக்காகவே இயங்கி வருகின்றது.

அங்கத்தவர்கள் தொடர்ந்து சேர்ந்த வண்ணம் இருக்க வேண்டும். அங்கத்தவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதைக் கொண்டே சகாய நிதியும் அதிகரிக்கும் என்பதை ஒருவரும் மறந்து விடக் கூடாது.

சங்கத்தில் உத்தியோகத்தர் கடமை உண்ணியம், கட்டுப்பாட்டுடன் நேர்மை நிறைந்தவர்களாக இருக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

சங்கக் கௌரவ செயலாளர் திரு ஆ. சச்சிதானந்தம் ஆண்டறிக்கையையும் பொருளாளர் திரு மு குமாரவேலு கணக்கு அறிக்கையையும் வாசித்தனர். (இ-161)

## பொதுக்கூட்டம்

கன்னாகம், அக் 9

வலிகாமம் தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு அரசாங்க ஓய்வூதியர் சேமநலச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 11 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.00 மணி அளவில் உடுவில் கிழக்கு மான் தமிழ் கலவன் பாடசாலையில், தலைவர் திரு தி மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும். (இ-27)

## ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்த 6 மாத பயிற்சி

யாழ்ப்பாணம், அக் 9

ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்துவதற்கு கொழும்பில் ஆறு மாதகாலப் பயிற்சி அளிக்கப்படும்

இதற்காக இலவசமாக எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று அகிலன் முன்னணி தெரிவித்துள்ளது.

ஒட்டுவேலை தெரிந்தவர்கள் விண்ணப்பிப்போருக்கே இதில் முன்னுரிமை வழங்கப்படும். (இ

## விளையாட்டரங்கு

## சிக்கோ - டிஸ்கோ கிரஸ் கொப்பேர்ஸ் சனியன்று மோதல்

கன்னாகம், அக் 9

கன்னாகம் தெற்கு கலைவாணி விளையாட்டுக் கழகத்தினர் நடத்தும் 7 வீரர்கள் கலந்துகொள்ளும் நொக்கவுட் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறுகிறது.

'சாம்பியன்' போட்டியில் சுந்தரோடை சிக்கோ டிஸ்கோ விளையாட்டுக் கழகம் தெல்லிப்பளை கிரஸ் கொப்பேர்ஸ் கடன் மோதுகிறது.

சிக்கோ டிஸ்கோ கழகத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தினரை 2-0 கோல்களாலும், காந்தி விராசர் விளையாட்டுக் கழகத்தினரை 5-1 கோல்களாலும் யுத் விளையாட்டுக் கழகத்தினரை 3-1 என்ற கோல் அடிப்படையிலும் சன்லைட் விளையாட்டுக் கழகத்தினரை 4-1 கோல்களாலும் வெற்றி பெற்றுள்ளனர்.

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை 7-0 கோல்களாலும் புழு ஸ்டார் விளையாட்டுக் கழகத்தை 6-1 கோல்களாலும் சிக்கோ டிஸ்கோ விளையாட்டுக் கழகத்தினர் வெற்றி பெற்று சாம்பியன் போட்டியில் மோத தகுதி பெற்றுள்ளனர்.

தெல்லிப்பளை கிரஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் ஞானகலா விளையாட்டுக் கழகத்தினரை 8-2 கோல்களாலும், விக்டோஸ்வரா விளையாட்டுக் கழகத்தை 5-1 என்ற கோல் அடிப்படையிலும் குருநகர் விளையாட்டுக் கழகத்தை 2-1 கோல்களாலும் வெற்றியீட்டி இறுதிப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

இறுதிப் போட்டியில் பங்கு பெறும் இரு அணியினரும் சிறந்த ஆட்டக்காரர்களைக் கொண்டுள்ளதால் சாம்பியன் போட்டியை ரசிக்கப் பெருந் தொகையானோர் கூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது (இ-27)

## உதைபந்தாட்டம்

பலாலி, அக் 9

காங்கேசன்துறை மகா வித்தியாலய மாணவர் அணிக்கும், கட்டுவன் புலம் மகா வித்தியாலய மாணவர் அணிக்கும் இடையில் இன்று வியாழக்கிழமை சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

18 வயதுக்கு உட்பட்ட மாணவர்களது அணியும், 19 வயதுக்கு உட்பட்ட மாணவர் அணியும் இப் போட்டியில் கலந்து கொள்ள உள்ளன. (இ-119)

## 19பேரும் விடுதலை

மட்டக்களப்பு. அக் 9

மட்டக்களப்பு பஸ் நிலைய குண்டு வெடிப்பு சம்பவ எதிரொலியாக சம்பவ தினம் நகர சுற்றுடலில் படையினரால் கைது செய்யப்பட்ட 19 பேரும் விசாரணையின் பின்பு விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

தீ வைப்புக்கு உட்பட்ட மினிபஸ் அதன் உரிமையாளரால் எடுத்துச் செல்லப்பட்டது. கார் ஒருவாரத்திற்கு மேலாக அகற்றப்படாத நிலையிலிருந்ததால் மாநகரசபை மூலம் அகற்றப்பட்டது (இ-21)

## குருளைச் சாரணர் பாசறை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் அக். 9

நாளை 10 ஆம் திகதி கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த குருளைச் சாரணர் பாசறை அனேகரின் வேண்டுகோளுக்கிணங்கப் பின்போடப்பட்டுள்ளது.

சாரணர் வருடாந்தப் பாசறை ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியில் இம் மாதம் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் நடைபெறும். (இ)

## தேவை

நிதி நிறுவனம் ஒன்றிற்கு யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் அனுபவம் வாய்ந்த பியோன் தேவை. சகல விபரங்களுடன் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

விளம்பர இல: 35,
த. பெ. இல; 23, யாழ்ப்பாணம்.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

### நள்ளிரவில் பெரும் சத்தம் கேட்டது

## விளக்கைக் கொளுத்திய போது மகள் பிணமாகக் கிடந்தார்

### சிலாவத்தை குண்டு வெடிப்பில் தாய் சாட்சியம்

முள்ளியவளை, அக். 9

நள்ளிரவு 12 மணி அளவில் பெரும் சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்தது. எழுந்து விளக்கைக் கொளுத்திய போது எனது மகள் ஹேரத் ரணசிங்ஹ கருணாவதி (வயது 31) இரத்த வெள்ளத்தில் கிடந்தார்.

சிலாவத்தை குண்டு வெடிப்பில் இறந்த ஹேரத் ரணசிங்ஹ கருணாவதியின் தாயார் பொடிகாமி (வயது 50) மேற்கண்டவாறு கூறினார்.

இவரின் மரணத்தை அடுத்து கடந்த சனிக்கிழமை சிலாவத்தையில் வீதி மறிப்புப் போராட்டம் நடந்ததும் கொலைக்கு காரணகர்த்தா என்று கூறப்பட்ட இளைஞர் ஒருவருக்கு நேற்று சிலாவத்தையில் மின்கம்பத்தண்டனை விதிக்கப்பட்டதும் தெரிந்த வையே.

மரண விசாரணையின் போது பொடிகாமி மேலும் கூறியதாவது:-

நானும் எனது மகளும் பிள்ளைகளும் கொட்டிலில் இருந்தோம். மகளின் கணவன் அப்பொழுது மகளுடன் திருப்தியீனமாக இருந்த படியால் இடைக்கிடையே மகளிடம் வருவார்.

நாங்கள் சிலாவத்தைக்கு அகதிகளாக வந்தபின் மகளின் கணவன் இவ்விடம் வருவதில்லை ஆனால் மகள் 4 மாதக் கர்ப்பிணியாக இருந்தார்.

இப்படித் தாயார் கூறினார்:

பிரேதபரிசோதனை செய்த முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கந்தசாமி சண்முகநாதன் சாட்சியமளிக்கையில் வலது பக்க மார்புப் பக்கமாக பல துளைகள் ஏற்பட்டதால் இறந்தவரின் நுரையீரலும் பாதிப்படைந்திருந்தது என்றார்.

இம்மரணம் கொலை எனத் தீர்ப்பளித்த முல்லைத்தீவு மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். செபமணி தொடர்ந்து புலன் விசாரணை நடத்தும்படி பொலிஸாரைப் பணித்தார். (இ-93)

### பணத்தை மீள முடியாது

## கிளிநொச்சி வங்கிகளில் வைப்புச் செய்தோர் பெரும் அவதி

யாழ்ப்பாணம் அக் 9

கிளிநொச்சியிலுள்ள வங்கிகளில் பணம் வைப்புச் செய்தோர் அவற்றை மீள எடுக்க முடியாது அல்லல் படுகின்றனர்.

காலபோக மயிர்ச் செய்கை ஆரம்பமாகியுள்ள தறுவாயில் பணம் தேவைப்படுவோர் வங்கிகள் ஸ்தம்பிதமடைந்ததைதொடர்ந்து பெரிதும் கஷ்டப்படுகின்றனர்கள்.

இவ்வாறு கிளிநொச்சி பிரஜைகள் குழு பிரதிநிதி, பிரஜைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழு கூட்டத்தில் தெரிவித்தார்.

வெளி நாடுகளிலிருந்து வரும் பணத்தை எடுக்க முடியாமலும், காசோலைகளை வைப்பிலிட முடியாமலும் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்கள் என்றும் அவர் தெரிவித்தார். (இ-55)

## ஆரம்ப பாடசாலைகள் நாற்று மேடைகள் போன்றவை

### கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், அக் 9

ஆரம்ப பாடசாலைகள் நாற்று மேடைகளைப் போன்றவை விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள் எனவே ஆரம்பப் பாடசாலையில் போடப்படும் அத்திவாரமே ஒரு மாணவனின் எதிர்கால கல்வியை, பண்புகளை நிர்ணயிக்கும்.

கல்விப்பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் இவ்வாறு கூறினார்.

யாழ் நல்லூர் சென் பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க வித்தியாலய பெற்றோர்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

பணிப்பாளர் மேலும் பேசுகையில் வடபகுதியில் ஆரம்ப பாடசாலைகளின் பெருக் வளர்ச்சிக்கு கத்தோலிக்க துறவிகளின் பங்கு முக்கியமானதாக இருந்திருக்கிறது.

அவர்கள் தங்கள் பணிகளை தொடர்ந்து செய்ய வேண்டும் என தமிழ் மக்கள் சார்பில் கேட்டுக் கொள்வதுடன் கல்வித் திணைக்களத்தின் சார்பில் நன்றியையும் ..... என்றார்.

அருட் சகோதரி மேரி லீசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ் ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். நல்லூர் வட்டாரக் கல்வியதிகாரி திரு சு. சிவநாயகமூர்த்தி, நல்லூர் பங்குத் தந்தை அருள் திரு ஜோசேப் அடிகள், அருட்திரு யேசுநேசன் அடிகள் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினர். (இ-5)

## தமிழ்த்தின விழா

புங்குடுதீவு, அக் 9

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தில் 'தமிழ்த்தின விழா' நாளை 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கால வித்தியாலய அதிபர் திரு த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

மூன்றும் ஆண்டு முதல் 11 ஆம் ஆண்டு வரையுள்ள மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களின், பல்வேறு நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெறும். (இ-131)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி செல்லத்துரை சிவபாக்கியம் (பேபி)



தோற்றம்: 10 - 11 - 1917

மறைவு: 30 - 09 - 1984

திதி: 09-10-1986

இல்லத்தின் இணையில்லாத் தலைவியாய்த் திகழ்ந்து எம்மை எல்லாம் சீராட்டிப் பாராட்டி நல்ல நிலையில் ஆளாக்கிய எம் அன்புத் தெய்வம் மறைந்து இரண்டாண்டுகள் சென்றாலும் பல்லாண்டுகள் எங்கள் நினைவில் அணையாத ஜோதியாய் நின்றிருந்து எம்மை எல்லாம் வாழ்விக்க இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

'செல்வகிரி', சித்தன்கேணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

வசதியும் வாய்ப்பும் வரும்போது நழுவ விடாமல் பற்றிப் பிடித்துக் கொள்வதில்தான் வாழ்க்கையில் வெற்றி பெறுவதன் இரகசியம் முழுவதும் அடங்கியுள்ளன. — டிஸ்றேலி

உதயன்
உண்மை - அச்சமின்மை - நடுநிலைமை
இல. 13 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம், 09-10-1986 த. பெ. இல. 23

# தனிக் கல்வித்திட்டம்

தமிழ் மக்களுக்கெனப் புதிய கல்வித் திட்டத்தை உருவாக்குவது சம்பந்தமாக இப்போது முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. மறுமலர்ச்சிக் கழகமும் மாணவர் முன்னணியும் இந்தப் புது முயற்சிக்குப் பின்னிற்கின்றன.

இப்போதைய கல்வித் திட்டம் தமிழர் வாழ்வை, மேம்பாட்டை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒன்றல்ல என்பதை எவரும் ஒப்புக்கொள்வர். தமிழர் கலாசாரத்துக்கும், ஒழுக்க முறைக்கும், வாழ்க்கை முறைக்கும், சமய வாழ்வுக்கும் உகந்த புதிய கல்வித் திட்டம் ஒன்று அவசியம் என்பதையும் எவரும் மறுத்துரைக்க இயலாது.

அதே வேளை தமிழருக்கான கல்வி முறை பழைமை வாய்ந்ததாக மட்டும் இருக்க வேண்டும் என்று எண்ணிவிடலாகாது. தமிழர் வாழ்க்கை முறை, கலாசாரம், வரலாறு என்பனவற்றை அடிப்படையில் கொண்டதான நவீன காலத்துக்கு உகந்த ஒரு கல்வித் திட்டமே இப்போதைய தேவை.

அதாவது எமது பழைமையைப் பேணும் அதே நேரத்தில் விரைந்து செல்லும் உலக மாற்றத்துக்கும் முன்னேற்றத்துக்கும் உகந்த விதத்தில் புதிய கல்வித்திட்டம் அமைவது அவசியம். மாணவர்களை, எதிர்காலச் சந்ததியினரை வெறும் பரீட்சைகளுக்குத் தயார்செய்யும் திட்டமாகவோ அல்லது முழுக்கமுழுக்க தொழில் நிலை நாடிய கல்வித் திட்டமாகவோ அது இருக்கக்கூடாது. ஒரு மனிதனை அறிவில் ஒழுக்கத்தில், வாழ்வில் முழு மனிதனாக்கக்கூடிய கல்வித் திட்டமே தேவை.

அவ்வாறான கல்வித்திட்டத்தை கல்விமான்களும், அறிஞர்களும் சேர்ந்து தயாரிக்க வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட திட்டத்தை வெள்ளை அறிக்கையாக வெளியிட்டு மக்கள் கருத்தும் அறியப்பட வேண்டும். கல்விதான் வாழ்வின் ஆதாரம்; அடிப்படை. எனவே அது ஆழ்ந்தகன்று ஆராய்ந்து வகுக்கப்படுவது அவசியம்.

புதிய கல்வித் திட்டம் தயாரிக்கும் வேலைகள் உரிய முறையில் கையாளப்பட வேண்டும் என்பதும் பிரதானமாகும். இப்போதைய ஆரம்ப முயற்சிகள் ஆலோசனைகள் ஒரு பூரணத்துவமான கல்வித்திட்டத்தை உருவாக்க வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

ஆனால் 'ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்காது' என்ற நிலையில் இப்போதைய தமிழ் மாணவர் கல்வி உள்ளது. அதுவும் இலவச பாடநூல் திட்டம் வந்தபின்னர் தமிழ் சிறார்களின் கல்வியில் மண் விழுந்திருக்கிறது.

பாடநூல்கள் தாராளமாகக் கிடைப்பதில்லை. உரிய நேரத்தில் கிடைப்பதில்லை. தமிழ்ப் பாடநூல்களை உரிய காலத்தில் வெளியிட வேண்டும் என்பதில் அரசுக்கு அக்கறையும் இல்லை.

இது குறித்து ஏற்கனவே இப்பத்தியில் 27-7-86 அன்று குறிப்பிட்டிருந்தோம். தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ்ப் பாடநூல்களை வெளியிட வசதி செய்யப்பட வேண்டும் என்பதை அவ்வேளை வலியுறுத்தி இருந்ததை வாசகர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ் மாவட்டப் பிரசாரச் செயலாளர் திரு ந. சிவநாதம் நேற்றைய உதயனில் வாசகர் இருமுகம் பகுதியில் வெளியிட்ட கருத்தும் இவ்வேளை கவனத்துக்கு எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

அவசரமாகச் செய்ய வேண்டிய ஒரு பணி குறித்து அவர் நல்ல ஆலோசனை தெரிவித்திருக்கிறார்.

''ஐந்தாம் வகுப்பு மாணவருக்கு வழங்கியுள்ள தமிழ் புத்தகம் தமிழர் கலாசாரத்திற்கு எதுவிதத்திலும் பொருத்தமானதல்ல என்பதை அந்த நூலைப்படிப்போர் உணர்வர்.

''அரசாங்கத்தின் கல்வித் திட்டத்தை நாம் ஒத்துக் கொள்ளும்வரை இந்நூல்களை நாம் படிக்க வேண்டும் தமிழ் மக்கள் இப்படியான நூல்கள் பற்றி முடிவு செய்யப் பல வருடங்கள் ஆகலாம்''

''ஆனால் தமிழர் கலாசாரம், மன்பதைகள், வீரம், தீரம் என்பனவற்றைத் தமிழ் மாணவர் கற்று இன்றைய காலகட்டத் தேவையை உணர, ஆரம்ப பிரிவிலிருந்து உப பாடநூல்கள் வெளிவர வேண்டும்''

''இந்நூல்களை 1987 கல்வி ஆண்டு ஆரம்பத்தில் பாடசாலை மாணவருக்கு இலவசமாகவோ, விலைக்கோ வழங்க தமிழ்க் கல்விமான்கள், அதிபர், ஆசிரியர் கொண்ட ஒரு கல்விச்சபை உடனடியாக உருவாக்கப்பட வேண்டும்'' என்று அவர் தெரிவித்தார்.

அந்தக் கருத்தை இன்றைய சூழ்நிலையில் எவரும் ஏற்கவே செய்வர்.

ஒரு வகுப்புக்கு என்று மட்டும் அல்லாமல் எல்லா வகுப்புகளுக்குமே உப பாடநூல்களை வெளியிடுவது அவசியம். தமிழ்ச் சிறார்களின் அறிவில் கறை பூசி அவர்களின் எதிர்காலத்தை இருள் சூழச் செய்வதைத் தடுக்க அதுவே உரிய மார்க்கமாகும். உடன் செய்யப்பட வேண்டியதுமாகும். தமிழர் வரலாற்றை, பண்பாட்டை அவர்களுக்கு ஊட்டுவதற்கு அது அவசியமாகும்.

தமிழர் கல்வியில் அக்கறை உடையவர்களும், கல்விமான்களும் இதில் அக்கறை காட்டுவார்களாக.

**வெளி உலகில்**

## விசாரணைக்குழு நியமனம்

புதுடில்லி, அக் 8

காந்தி சமாதியில் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை முயற்சி பற்றி விசாரணை செய்ய விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மத்திய மந்திரிச் செயலர் பி ஜி தேஷ்முக் இதன் தலைவராக இருப்பார்.

கொலை முயற்சி சம்பவம் பற்றியும் பாதுகாப்பு ஏற்பாடுகளின் உள்ள குறைகள் பற்றியும் எவரும் கடமைகளில் இருந்து தவறுகின்றார்களா என்பது பற்றியும் இக்குழு விசாரிக்கும் (ஒ)

## றேகன் நிராகரிப்பார்

வாஷிங்டன், அக் 8

அமெரிக்காவில் இராணுவ செலவுகளை பெருமளவு குறைக்கும் சட்ட ஆக்கங்கள் எதனையும் மக்கள் பிரதிநிதிகள் சபை கொண்டு வருமானால் தனது விசேட அதிகாரங்களால் அதனை நிராகரிக்கப் போவதாக ஜனாதிபதி றேகன் தெரிவித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதிகள் சபை நிறைவேற்றிய சட்டமூலம் பாதுகாப்புச் செலவினங்களுக்கென 28 ஆயிரத்து எழுநூறு கோடி டாலர் மட்டுமே அங்கீகரித்துள்ளது.

இந்த சட்ட மூலம் அமுலுக்கு வந்தால் அணுகுண்டுப் பரிசோதனையை அமெரிக்கா கைவிட நேரிடும்.

அத்துடன் 'ஸ்டார் வார்ஸ்' எனப்படும் விண்வெளி ஏவுகணை பாதுகாப்புச் செலவுகளையும் குறைக்க வேண்டியிருக்கும் (ஒ)

## சிறுமிக்கும் எயிட்ஸ்

மாஸ்கோ, அக் 8

மாஸ்கோவில் 11வயது சிறுமிக்கு ஆட்கொல்லி நோயான 'எய்ட்ஸ்' பிடிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இச் சிறுமிக்கு ஏற்றப்பட்ட இரத்தத்தில் இந்நோய்க் கிருமிகள் கலந்திருக்கலாம் என அறிவிக்கப்பட்டது. (ஒ)

## சிவாஜிக்கு பிரதமர் தந்தி

சென்னை அக். 8

சிவாஜி கணேசனுக்கு தேறுதல்கூறி பிரதமரும் ஜனாதிபதியும் தந்தி அனுப்பியுள்ளனர் (ஒ)

# கூர்காக்கள் கோரிக்கை நிராகரிப்பு

கல்கத்தா, அக் 8

கூர்காக்களுக்கு தனி நாடு வேண்டும் எனவும் அதற்காக மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் எனவும் கூர்கா தேசிய முன்னணி கோரியதை மத்திய அரசு நிராகரித்துள்ளது.

மத்திய உள்துறை அமைச்சர் பூட்டாசிங் கூர்கா தேசிய முன்னணித் தலைவர் சுபாஷ் தேசிங்குக்கு அனுப்பிய கடிதமொன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது பற்றி பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தபடி வங்காளம் பிரிவுபடவும் மாட்டாது அரசியல் சாசனம் திருத்தப்படவும் மாட்டாது எனவும் பூட்டாசிங் தெரிவித்தார். (ஒ)

## விஷ்ணு சிலைகள் கண்டுபிடிப்பு

ஹைதராபாத் அக். 9

ஆந்திரப் பிரதேசத்தில் அகழ்வு ஆராய்ச்சி வேலைகளில் விஷ்ணுவின் நான்கு கருங்கல் உருவச் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இவை 16 ஆம் நூற்றாண்டை சேர்ந்தவைகளாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. (ஒ)

## ஒருபகுதி ஆயர்கள் திருமணத்தில் ஆர்வம்

வாஷிங்டன், அக்.8

அமெரிக்காவில் உள்ள கத்தோலிக்க ஆயர்களில் நாலில் ஒருபகுதியினர் கத்தோலிக்க மதகுருமார் திருமணம் செய்து கொள்ளலாம் எனக் கருதுகின்றார்கள்.

அமெரிக்காவில் உள்ள 312 ஆயர்களின் அபிப்பிராயங்கள் சேகரிக்கப்பட்டன.

இவர்களில் 80 பேர் கத்தோலிக்க மதகுருமார் கட்டாயமாக பிரமச்சாரிகளாக இருக்க வேண்டும் என்ற விதியை தளர்த்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்கள். (ஒ)

## சார்ள்ஸின் உதவியாளர் 'எய்ட்ஸி'ற்கு பலியானர்

லண்டன், அக்.8

முடிக்குரிய பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸின் முன்னாள் அந்தரங்க உதவியாளர் எய்ட்ஸ் நோயினால் நேற்று காலமானார்.

37 வயதான ஸ்ரீபன் பெர்றி 1981 ஆம் ஆண்டில் சார்ள்ஸின் அந்தரங்க பணியாளர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்திருந்தார்.

ஸ்ரீபன் பெர்றி அமெரிக்க சஞ்சிகையொன்றிக்கு தனது வாழ்க்கை வரலாற்றினை விற்றதினால் பிரிட்டனில் பெரும் அரசியல் சர்ச்சையொன்றும் கிளம்பியிருந்தது.

அரச குடும்பத்தின் பிரதான வாசஸ்தலமாகிய பக்கிங் ஹாம் மாளிகையில் இருந்து ஊழியர் இளைப்பாறிய பின்னர் அல்லது பதவி விலகிய பின்னர் அரச குடும்பத்தினரின் அந்தரங்க வாழ்க்கை அவர்களின் உடை, பழக்க வழக்கங்கள் குணாதிசயங்கள் உணவுப் பழக்கங்கள் போன்றவை குறித்து எக்காரணம் கொண்டும் எந்தவொரு பத்திரிகைக்கும் பேட்டியளிக்கவோ அத்தகைய நூல் உருவிலோ வெளியிடக்கூடாது என்று ஒரு சம்பிரதாயம் பல நூற்றாண்டு காலமாக இருந்து வருகிறது.

ஸ்ரீபன் பெர்றி இதனை மீறி இருந்தார்.

இத் தகவல்களை வெளியிட்டதற்காக 20 லட்சத்து 50 ஆயிரம் ஸ்டேலிங் பவுண் அவருக்கு சன்மானமாக வழங்கப்பட்டது. (ஒ)

## ராணுவ விமானம் வீழ்த்தப்பட்டது

மனாகுவா, அக். 8

நிகரகுவா கிளர்ச்சியாளர்களுக்கு உதவுவதற்காக அமெரிக்க ராணுவத் துருப்புகளை ஏற்றி வந்த விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது. (ஒ)

வடக்கு, கிழக்கு

# உபதபால் அதிபர்களுக்கான கொடுப்பனவு குறைக்கப்படாது

யாழ்ப்பாணம், அக் 9

வன்செயல்கள் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள உபதபால் நிலையங்களில் வருமானம் குறைந்துள்ளதைக் காரணம் காட்டி, உபதபால் அதிபர்களுக்கான கொடுப்பனவுகளை குறைக்கவேண்டாம்.

இப்படி தபால் மா அதிபர், தபால் திணைக்களத்தின் வர்த்தகக் கணக்காளருக்கு உத்தரவிட்டிருப்பதாக அகில இலங்கை தமிழ்பேசும் உபதபால் அதிபர்கள் சங்கத் தலைவர் திரு. ஐ நடராசா உதயனுக்குத் தெரிவித்தார்.

வன்செயல் காரணமாக வடக்கு, கிழக்கில் உள்ள உபதபால் நிலையங்களின் வருமானம் கணிசமாகக் குறைந்துள்ளது.

உபதபால் அதிபர்களுக்கு வருமானத்தைப் பொறுத்தே யூனிட் அடிப்படையில் மாதக் கொடுப்பனவுகளை தபால் திணைக்களம் வழங்கி வருகின்றது

வருமானம் குறைந்துள்ளதால் உபதபால் அதிபர்களுக்கான கொடுப்பனவுகளும் குறையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக சங்கத் தலைவர் திரு ஐ. நடராசா, தபால்மா அதிபரிடம் முறையிட்டார்.

அதைத் தொடர்ந்தே மேற்கண்ட பணிப்புரையை தபால்மா அதிபர் விடுத்திருக்கிறார்

இதனிடையில் வன்செயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள உபதபால் நிலைய அதிபர்களை பிரதம தபால் நிலையங்களில் கடமையாற்றவும் தபால் மா அதிபர் அனுமதித்திருக்கிறார்.

திருமலை மாவட்டத்திலுள்ள சில உபதபால் அதிபர்கள் இப்படி பணியாற்றுகிறார்கள்.

இத்தகவலையும் சங்கத் தலைவர் திரு ஐ நடராசா தெரிவித்தார். (இ-எ)

### சங்கீத வித்தியாரம்பம்

யாழ்ப்பாணம், அக்.9

விஜயதசமி தினமாகிய ஞாயிற்றுக்கிழமை பி ப. 4 00மணி முதல் நல்லூர் ஸ்தானிகர் சி.த.க. பாடசாலை மண்டபத்தில் வாய்ப்பாட்டு, வீணை வயலின், புல்லாங்குழல், மிருதங்கம் ஆகிய பாடங்கள் வித்தியாரம்பம் செய்து வைக்கப்படும்

அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் இசை வகுப்புகள் நல்லூர் ஸ்தானிகர் சி.சி.த.க. பாடசாலை மண்டபத்தில் கடந்த மார்கழி மாதத் தொடக்கம் நடைபெற்று வருகிறது. (ஒ)

## அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப் பாடசாலைக் காணி அகதிகளுக்கு பகிர்ந்தளிப்பு

பலாலி, அக். 9

அச்சுவேலி, செல்வநாயகபுரத்தில் அமைந்துள்ள 'மக்கோனா' சிறுவர் சீர்திருத்தப் பாடசாலைக்குரிய சுமார் 110 பரப்புக் காணி அகதிகளின் குடியேற்றத் திட்டமாக மாறியுள்ளது.

இப் பாடசாலைக் கட்டடம் உடைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

பலாலி விமான நிலையத்தின் தென்பகுதி (மடத்தடி) வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் மேற்குப்பகுதி, குரும்பசிட்டி வடக்குப்பகுதி, ஆகியவற்றில் இருந்து இராணுவ முகாம் விஸ்தரிப்பால் வெளியேறிய சுமார் 86 பேருக்கு ஒருவருக்கு ஒன்றே கால் பரப்பு வீதம் இங்கு காணி பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

'புனொட்' இயக்கத்தின் மேற்பார்வையின் கீழ் இக் காணி விநியோகமும் குடியேற்றமும் நடத்தப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு குட்டியப்புலத்தில் 'சுந்தரபுரம்' என்ற குடியேற்றக் கிராமமும் இந்த அமைப்பினால் பல மாதங்களுக்கு முன் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது (இ-119)

தீவிரவாத செயல்களுக்கு எதிராக

## சிமெ. கூட்டுத்தாபனம் காப்புறுதி இல்லை

கொழும்பு, அக் 9

தீவிரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக சிமெந்து கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான தொழிற்சாலைகள், அலுவலகங்களைக் காப்புறுதி செய்வது இல்லை என்று உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு முடிவு செய்துள்ளது.

இதற்கு அரசாங்கத்தின் அங்கீகாரத்தையும் அமைச்சு கோரியுள்ளது.

இந்த முடிவின்படி கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காங்கேசன்துறை, புத்தளம், காலி ஆகிய இடங்களில் உள்ள தொழிற்சாலைகள். மட்டக்குளிய கடதாசிப் பைத் தொழிற்சாலை ஆகியன தீ,மற்றும் விபத்துக்களுக்கே காப்புறுதி செய்யும்.

தீவிரவாதச் செயல்களினால் ஏற்படும் நஷ்டங்களுக்கு ஆண்டுதோறும் 1 கோடி 34 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவை கூட்டுத்தாபனம் கட்டவேண்டும். இதைக் கட்ட முடியாது என்று காரணம் காட்டியே காப்புறுதி செய்ய அமைச்சு மறுத்துள்ளது

அமைச்சின் கோரிக்கைக்கு நிதி அமைச்சு அங்கீகாரமளித்துள்ளது. (இ-எ)

## மத்திய கல்லூரியில் சாரணர் விழா

யாழ்ப்பாணம், அக்.9

யாழ் மத்திய கல்லூரியின் 25 புதிய சாரணர்களுக்கு உலகச் சாரணர் சின்னம், இலங்கைச் சாரணர் சின்னம் கழுத்துப்பட்டி சாரணர் தண்டம் ஆகியவை வழங்கப்பட்டன.

இந்த வைபவம் செவ்வாய்க்கிழமை காலை பதினொரு மணியில் யாழ் மத்திய கல்லூரியில் சாரணர் குழுத்தலைவர் செல்வன் ஐ நவரத்தினராஜா தலைமையில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திரு. வி. பாலசுந்தரம் சாரணர் கொடியை ஏற்றி வைத்தார்.

வைபவத்தில் கல்லூரி அதிபர் உதவி மாவட்ட ஆணையாளர் திரு என். சாம்பசிவம், குழுச்சாரண ஆசிரியர் திரு. ஜி. சபாநாதன் உதவிச் சாரண ஆசிரியர் செல்வன் இ. திலைவாசன், குருளைச் சாரணர் ஆசிரியர் திரு. தியாகராஜன் சாரணர் பயிற்சியாளர் செல்வன் எஸ். அன்பழகன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-10)

**பொய்யாமொழி**



குறள்:

நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல்.

பொருள்:

மனத்தில் பற்றுக்களைத் துறக்காமல், துறந்தவரைப் போல் வஞ்சித்து வாழ்ந்து வருகின்றவரைப்போல் இரக்கமற்றவர் வேறு எவரும் இல்லை.

# நவராத்திரி நிகழ்ச்சிகள்

### திருநெல்வேலியில்

யாழ்ப்பாணம், அக் 9

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையத்தினரால் வாணி விழாவும் பாலர் பாடசாலை பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை நடத்தப்படும்

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் 'சரஸ்வதி வழிபாடு' என்னும் பொருள்பற்றி நற்பூரை நிகழ்த்துவார். (இ-எ)

### ஆனைப்பந்தியில்

இலங்கைத் தமிழ் வெளிவாரி பட்டதாரிகள் மாணவர் ஒன்றியம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வாணி விழா நடத்துகிறது.

ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரியில் இவ் விழா இடம்பெறும்

### சங்கானையில்

சங்கானை ஐக்கியநலன் புரிச் சங்கத்தின் கல்வித் துறையும் கலைத்துறையும் இணைந்து நாளை 10 ஆம் திகதி பொன்னப்பா இல்ல முன்றலில் வாணி விழா நடத்தும். கல்வி அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளும் வழங்கப்படும். (இ-எ-10)

### புங்குடுதீவில்

புங்குடுதீவு பெருங்காடு சிவன்கோவிலில் நவராத்திரி பூசையைத் தொடர்ந்து 21 தினங்கள் கௌரி நோன்பும் லட்சார்ச்சனையும் நடைபெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் நவம்பர் 1 ஆம் திகதிவரை காலையில் அபிஷேகமும் மாலையில் லட்சார்ச்சனையும் நடைபெறும்.

புங்குடுதீவு தென்பெருந்துறை சிவன் ஆலயத்திலும் நவராத்திரிவிழா நடைபெறுகிறது

### கட்டுவன்புலம்

கட்டுவன்புலம் மகா வித்தியாலயத்தில் நவராத்திரியை ஒட்டி எதிர்வரும் வெள்ளி கலைவிழா நடைபெறும்.

பட்டிமன்றம், நாடகம், பரத நாட்டியம் ஆகிய நிகழ்ச்சிகள் இதில் இடம்பெறும்.(இ-எ-119)

### நல்லூரில்

விஜயதசமி தினத்தன்று நல்லூர் சட்டநாதஸ்வாமி ஆலயத்தில் அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் விஜயதசமி விழாவும் திருமுறை அமுதம் எனும் தலைப்பில் ஒலிப்பதிவு நாடா வெளியீடும் செய்யவுள்ளனர். (ஒ)

### புளியங்குளத்தில்

புளியங்குளம் முத்துமாரி நகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் நாளை வெள்ளி நடைபெறும் நவராத்திரி விழாவில் ''அம்பிகையின் அருள் பெற்ற அருளாளர்கள்'' என்னும் பொருள் பற்றி வித்துவான் மு. சபாரத்தினம் உரை நிகழ்த்துவார். (இ-எ)

நவராத்திரி சிறப்பம்சம்

## வாணியை வேண்டுகின்றேன்

கானல் பாசித்த பாலை வனத்தில் வாடிய பயிரெனக்கு, மழையென வர்ஷிக்க
வாணியை வேண்டுகிறேன் வரமொன்று
தருவாய்

நிலையான வாழ்வுக்கு நிலையற்ற செல்வம்
எதற்கு? என்னுயிர் பிரிந்திடினும் பிரியாத
கல்வியை புரியாத மனிதர்க்கு புரியவைக்கும்
பொன்னான வரமொன்று புதிதாக தருவாய்,

வகையொன்றும் தெரியாமல் நகைமலிடும்
நாடுகின்ற நங்கையின் கனவுக்கு
நல்லறிவு புகட்டிட நங்கையெந்தன்
மனதுக்கு அறுபத்து நான்கினையும் அன்புடனே
தருவாய்

தூயவெண் தாமரையில் துயிலாமல் பயில்கின்ற
தத்துவத்தின் வித்தகியாம் வீணாதேவியே
அறிவொன்றும் தெரியாமல் விழலென்று
வாழ்கின்ற
வீணரின் வாழ்விலே அறிவொளி அளித்திட
அம்பிகையே! அமிழ்தினும் இனிய வரமொன்று
தருவாய்!

— ஸ்ரீ. துசிதாதர்ஷினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BITSMANS INSTITUTES**
MANIPAY.
87 A/G. A/L பௌதிகம் (புலங்கள்)
ஆரம்பம்: 11-10-86 SAT. 7.00 A m
87 A/G. A/L பௌதிகம் (மீட்டல்) வகுப்புக்கள்
ஆரம்பம்: 9-10 86 வியாழன் 4 30 p.m.
ஆசிரியர்: திரு. சௌந்தி B.Sc (Hons)

# உதயன்

09 - 10 - 1986 வியாழக்கிழமை

**BITSMANS INSTITUTES**
MANIPAY.
88 A/G. A/L பொது இரசாயனம் திரு. மகாதேவா B Sc
நேர அட்டவணை: SAT., SUN – 12-30 p.m.
87 A/G. A/L பௌதிக இரசாயனம் திரு. மக்லி B Sc
ஆரம்பம்: 9.10 86 வியாழன் 3-30 P.m.

போராளிகள் யாழ், மட்டுநகர் வந்துவிட்டார்களே:

# இந்தியாவில் பயிற்சி முகாம்கள் எப்படி இருக்க முடியும்?

## அனுரா கேட்கிறார்

கொழும்பு, அக். 9
இந்தியாவில் தமிழ்த் தீவிரவாதிகள் முகாம்கள் இல்லை என்று பிரதமர் ராஜீவ் காந்தி கூறியது உண்மைதான். பயிற்சி பெற்ற தீவிரவாதிகள் முகாம்களை மூடிவிட்டு யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் தாமே நிற்கிறார்கள். பின்னர் எப்படி இந்தியாவில் பயிற்சி முகாம்கள் இருக்க முடியும்?

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் திரு அனுரா பண்டாரநாயக்கா கேட்டார்.

அனுராதபுரத்தில் நடந்த தாயகம் காக்கும் இயக்கக் கூட்டத்தில் திரு. அனுரா பண்டாரநாயக்கா உரையாற்றினார்.

திரு அனுரா பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது:

7 ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டில் 325 தீவிரவாதிகள்தான் இருந்தனர். இன்று இது ஒன்பதினாயிரம் ஆக அதிகரித்துள்ளது.

25,000 சதுரமைல் பிரதேசத்தில் 8 000 சதுரமைல் பிரதேசம் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது.

ஆயுத படையினரைக் கொண்டு தீவிரவாதத்தை அடக்குவதே தற்போதுள்ள ஒரே ஒரு வழி. இதைச் செய்யும்வரை தீவிரவாதத்தை ஒழிக்க முடியாது.

மாகாண சபைத் திட்டம் சமாதானத்தைக் கொண்டுவரப்போவது இல்லை.

சிங்கள, முஸ்லிம் மக்கள் மாகாண சபைகளைக் கோரவில்லை.

ஜனநாயகவிரோத நடவடிக்கையினூல் அரசாங்கத்தைத் தோற்கடிப்பது நமது எண்ணம் அல்ல.

இறந்தவர்களின் சடலங்கள்மீது நடந்துசெல்வதும் எமது நோக்கம் அல்ல.

இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்கா சொன்னார். (இ-எ)

ஐ தே. க. செயற்குழுக் கூட்டம்

கொழும்பு, அக். 9
ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் ஒன்று இம்மாதம் 23 ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ளது.

மிக முக்கியமான கூட்டமாக அது இருக்கப் போகிறது என்று ஐ தே. க. பொதுச் செயலாளர் நந்தலால் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சுமார் 10,000 உறுப்பினர்கள் பங்குபற்றும் ஐ தே க. வருடாந்த மாநாடு டிசம்பர் 6 ஆம் திகதி நடைபெறும். (இ-எ)

## கூட்டணியின் யோசனைகள் கையளிப்பு

சென்னை, அக். 8
இலங்கை அரசின் உருவாக்கங்களை அலசும் ஆக்கமாக பரிசீலனை செய்து எமது கருத்துக்களை இறுதிப்படுத்தி விட்டோம்.

இறுதிப்படுத்தப்பட்ட எமது கருத்துக்கள் இந்திய சட்ட நிபுணர் திரு பாலகிருஷ்ணனிடம் கொடுக்கப்பட்டு விட்டன.

இப்படி கூட்டணிச் செயலதிபர் திரு அ அமிர்தலிங்கம் தெரிவித்திருக்கிறார். (இ-ஐ-எ)

## றெஜினுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், அக் 9
கடந்த 8ஆம் திகதி சாம்பல்தீவில் முகாம் அமைக்க வந்த இராணுவத்தினருடன் இடம் பெற்ற நேரடி மோதலின்போது அம்மணியின் மீட்புக்காக களத்தில் தனது இறுதி மூச்சுள்ளவரை போராடி வீரமரணம் அடைந்த— கப்டன் — றெஜினுக்கு (புன்னாலைக்கட்டுவன்) எமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

## கல்வி பொருட்காட்சி

புங்குடுதீவு, அக் 9
புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் வித்தியாலயத்தின் கல்விப் பொருட்காட்சி இம்மாதம் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை வித்தியாலய அதிபர் திரு. க யோ. பூரசா தலைமையில் நடைபெறும். (இ-131)

## சங்கத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம், அக். 9
தெல்லிப்பழை வடமேற்கு நுகர்வோர் பாதுகாப்புச் சங்கத்தின் செயற் குழுக் கூட்டம் தலைவர் திரு செ குமாரசாமி தலைமையில் கூடியது

சங்க அங்கத்தவர்களாகச் சிறப்புடன் பணிபுரிந்த திரு. ச. கனகசபாபதி, திரு க. அருளானந்தம் ஆகியோரது மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது (ஓ)

## ஜனாதிபதி இன்று பேசுவார்

கொழும்பு, அக். 9
மாகாண சபைகள் யோசனையை ஆதரித்து இன்று வியாழக்கிழமை ஜனாதிபதி ஜெயவர்த்தன நுகேகொடையில் பேசுவார்.

மாகாண சபைகள் யோசனையை எதிர்த்து சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி. சிறிமாவண்டாரநாயக்கா இன்று ரம்புக்கனையில் பேசுவார். (இ எ)

## தவறிவிட்டது

447612151x எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை ஒன்று 6-10-86 (திங்கள்) அன்று மாவிட்டபுரத்திற்கும் சந்திரைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து செ மதியழகன், கோணகடிபா வளவு, வதிரி எனும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**அமரர் உயர்திரு. சிவநேசசுந்தரம் அவர்களின்**

**அந்தியேட்டி அழைப்பிதழ்**



மண்ணுலகம்: 07 - 02 - 1931 | விண்ணுலகம் 10 - 09 - 1986

அன்பும் பண்பும் நிறைந்த எங்கள் குடும்பத் தலைவன் இலங்கை அரச நெருஞ்சாலைப் பெருந்தெரு திணைக்கள எழுதுவினைஞராய் ஒய்வுபெற்று 11-09-86 இல் இறைவனடி எய்தினார். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 10-10-86 இல் தெல்லிப்பழை, குரும்பசிட்டித் தெருவில் அமைந்துள்ள "சத்தியகிரி" இல்லத்தில் நடைபெறும் உறவினர்களையும், அன்பர்களையும் அழைக்கின்றோம்.

தெல்லிப்பழை, குரும்பசிட்டி

இங்ஙனம் மனைவி, பிள்ளைகள்

தமிழ் ஈழ இராணுவம் விளக்கம்:

## அதிர்ஷ்ட லாபச்சீட்டு ஏன்?

யாழ்ப்பாணம், அக். 9
தமிழ் மக்களின் நன்மை கருதியும், போராட்ட காலத்தில் உயிர் இழந்தவர்களின் நினைவு நிதியாகவும், போராட்ட வளர்ச்சிக்கான பங்களிப்பாகவும் தமிழ் ஈழ இராணுவம் அதிர்ஷ்ட லாபச் சீட்டு முறையை நடைமுறைக்குக் கொண்டு வருகிறது.

'தமிழ் ஈழம் போர் நிதி' என்ற தலைப்பில் தமிழ் ஈழ இராணுவத்தின் ஆலோசனை சபை வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது சீட்டிழுப்பு நவம்பர் மாதம் பத்தாம் திகதி திங்கட்கிழமை மாலை 5 30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் மேற்கு வீதியில் நடத்தப்படும்.

எமது முதற்கட்ட நடவடிக்கையாக ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் ஏற்றுமதிப் பரந்தளவில் பாதிக்கும் வகையில் இலங்கையில் இருந்து ஏற்றுமதியாகும் தேயிலையில் 'சயனைட்' நஞ்சு கலந்ததன் மூலம் உலக சந்தையில் ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது.

இதனால் இலங்கைக்கு கிடைத்து வந்த ஆயுத, இராணுவ, நிதிவசதிகள் குறைக்கப்பட்டன.

ஆயினும் தவிர்க்க முடியாமல் எமது மலையகத் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படும் என்பதால் எமது நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது

இப்படி அந்தத் துண்டுப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ-10)

முகமூடி...
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
அகதிகளாக இருந்தவர்களில் 6 ஆண்களும் மூன்று பெண்களும் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் திருமலை கோட்டை இராணுவ முகாமுக்கு விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டனர் (இ-எ-150)

ஒற்றுமை...
(1ம்-பக்கத் தொடர்ச்சி)
இடையே தேவை.

மட்டக்களப்பில் நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலும் திருமலையில் நிலை மோசமாக உள்ளது

அரசு—கூட்டணிப் பேச்சுக்களுக்கும் எமக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை

இப்படி திரு. பத்மநாபா சொன்னார். (இ ஐ எ)

அரச உதவி கிடைக்கும் வரை

## முல்லைத்தீவு வரும் திருமலை அகதிகளுக்கு வாரம் 3 நாள் உணவு

யாழ்ப்பாணம், அக். 9
முல்லைத்தீவு மாவட்டத்துக்குத் தினமும் வந்து கொண்டிருக்கும் திருமலைத் தமிழ் அகதிகளுக்கு அரச உதவி கிடைக்கும் வரை வாரத்துக்கு மூன்று தினங்கள் உணவுப் பொருள்கள் வழங்க தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் சம்மதம் தெரிவித்துள்ளது.

தன்னைச் சந்தித்து முறையிட்ட முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம் இதனை தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் பேராசிரியர் சிவத்தம்பி தெரிவித்தார்.

இதுவரை திருமலையில் இருந்து புதிதாக சுமார் ஆயிரம் பேர் கொண்ட 200 தமிழ்க் குடும்பங்கள் முல்லைத்தீவுக்கு வந்துள்ளன. இன்னும் வந்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது

இதனிடையில் 85 திருமலை அகதிக்குடும்பங்களுக்கு உடுதுணிகளை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் வழங்க குமரகுருபரர் சபை யாழ்கிளை சம்மதித்துள்ளது இக்கிளை ஏற்கனவே 329 குடும்பங்களுக்கு உடுதுணிகளை வழங்கியது. அப்போது இந்த 35 குடும்பங்களும் தவறுதலாக விடப்பட்டு விட்டன (இ-எ)

## மலையக மாணவர்களின் போராட்டத்துக்கு தமிழீழ மாணவர் பேரவை ஆதரவு

யாழ்ப்பாணம், அக். 9
மலையக தமிழ் பேசும் மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுப்போம் என்ற தலைப்பில் தமிழீழ மாணவர் பேரவை நேற்று விடுத்த அறிக்கை வருமாறு:

வடக்கு, கிழக்கு, மலையகவாழ் தமிழ் பேசும் மக்கள்மீது சிறிலங்கா அரசு திட்டமிட்ட ஆக்கிரமிப்பு யுத்தத்தை தொடர்ந்தும் விரிவுபடுத்தி வருகின்றது

1972ஆம் ஆண்டிலிருந்து தமிழ்பேசும் மாணவர்களையும் தனது இனவாதக் கரங்களால் நசுக்கிய வருகின்றது

இத்தகைய சூழ்நிலையில் மலையகத் தமிழ் பேசும் மாணவர்கள், ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

தற்போது அரசபடைகளினால் கைதுசெய்யப்பட்ட ஆசிரியரை விடுவிக்கக்கோரி தொடர்ச்சியான பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்துள்ள மலையகத் தமிழ் பேசும் மாணவர்கள் காலம் காலமாக சிறிலங்கா அரசினது அதிகார சாதனங்களினால் துன்புறுத்தப்பட்டு வந்துள்ளனர்.

எனவே மலையகத் தமிழ் பேசும் மாணவர்களது நியாயமான போராட்டத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டியது தேசிய விடுதலைப் போடு சமூக விடுதலையையும் கருத்தில் கொண்ட அனைத்து சக்திகளதும் கடமையாகும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

லக்ஷ்மி ..
(1ம் பக்கத் தொடர்ச்சி)
யாக செல்வி நாகநாதன் பணியாற்றுவார்.

அத்துடன் உலகநாடுகளில் தலைநகரங்களுக்குச் சென்று தமிழர் இனப்பிரச்னை குறித்து சர்வதேச மயப்படுத்தும் வேலைகளிலும் செல்வி நாகநாதன் ஈடுபடுவார் என்று அமெரிக்காவில் உள்ள ஈழம் தமிழ்ச் சங்கத் தலைவர் ஸ்ரீ தில்லை யம்பலம் தெரிவித்தார்.

தமிழீழத் தொடர்பு நிலையங்கள் வாஷிங்டனிலும் லண்டனிலும் நிறுவப்படவுள்ளன.

இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் தற்போது வசித்து வரும் இலங்கையின் முன்னாள் இராஜதந்திரிகளான தமிழர்களில் இருவர், வாஷிங்டன், லண்டன் நிலையங்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்படுவர்.

நியூயோர்க்கில் நடந்த கூட்டம் ஒன்றில் தேசக்கொடி — தாங்கிகள் வெளியிடப்பட்டன.

ஈழம் தமிழ் இலக்கியச் சங்கமும் ஈழம் தமிழ் சங்கமும் இக்கூட்டத்தை ஒழுங்கு செய்தன. (இ எ)

தேடி . . .
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கையை இலங்கை நிறுத்த இந்தியா நடவடிக்கை எடுக்க [illegible]

இப்படி கூட்டணி அரசியல் குழு பிரதமரைக் கேட்டுள்ளது. (இ-ஐ-எ)

சிப்பாய்கள்---
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
முகாம் திரும்பினர்.

வாசனின் முகாமுக்குச் சென்று கொண்டிருந்த பொழுது போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட போதே பிரசன்னாவின் காரியின் கார் சேதமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது (இ.10)

முகாமை ..
(1ம் பக்கத் தொடர்ச்சி)
மாதம் துணி போடப்பட்டிருந்த கம்பியிலும் மின்சாரம் பாய்ந்திருக்க வேண்டும் என்றும் அதனை அறியாது திரு. ஸ்ரீகாந்தா முகம் கழுவி விட்டு வந்து கம்பியில் போடப்பட்டிருந்த துவாயை எடுத்தார் என்றும் அப்போது மின்சாரம் தாக்கி அவர் தூக்கி வீசப்பட்டார் என்றும் சொல்லப்பட்டது தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதிலும் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

நாற்பத்தொரு வயதினரான திரு. ஸ்ரீகாந்தா ஒரு பட்டதாரி யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் நான்கு பிள்ளைகளின் தந்தை. கடந்த பத்து வருடங்களாக வீரகேசரி யாழ் கிளையின் முகாமையாளராகப் பணியாற்றியவர்.

நேற்று நடைபெற்ற அவரது இறுதிச்சடங்கில் பத்திரிகையாளர்கள், அரசியல் பிரமுகர்கள், [illegible] யாழ்ப்பாணத்தார் கலந்து கொண்டனர் (அ-27)

வெளிநாட்ட...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
என்ற சந்தேகம் திட்டமிடல் அமைச்சுக்கு ஏற்பட்டுள்ளதாம்.

இதைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கில் உள்ள வெளிநாட்டவர்களின் நடமாட்டங்கள் குறித்து தீவிர கண்காணிப்பு செலுத்தும்படியும் — சந்தேகத்துக்கிடமான வெளிநாட்டவரின் விபரங்களை எந்துச்செய்யும்படியும் கோரி திட்டமிடல் அமைச்சு, வெளிநாட்டமைச்சுக்கும் குறிப்பு ஒன்றை அனுப்பி உள்ளது.

இப்பகுதிகளில் உள்ள தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள் பற்றி சில வெளிநாட்டவருக்குத் தெரிந்த இருப்பதாகவும் திட்டமிடல் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு, கிழக்கில் பணிபுரியும் சில வெளிநாட்டவர்கள் வதிவிட விசா பெற்றவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## அழைப்பு

எதிர்வரும் வெள்ளிக்கிழமை 10-10-86 பிற்பகல் 2-30 மணிக்கு ஆனைக்கோட்டை புதுவாழ்வு நிலையத்தின் செபமண்டபம் திறப்பு விழா- வழிபாட்டில் கலந்துகொள்ள அன்புடன் உங்களை அழைக்கிறோம்.

புதுவாழ்வு நிலையத்தார்
ஆனைக்கோட்டை

யாழ்நகரில்
உங்கள் பிரிய
**'அணில்' ஐஸ் கிறீம்**
வசதியாக அமர்ந்து அருந்திச் செல்லவும் வீட்டுக்கு எடுத்துச் செல்லவும் ..
**Cups, Family Blocks, Gallons**
**A. S. சங்கரப்பிள்ளை & சன்ஸ்**
164, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி
● குவைத்
● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார். இதுவரை எமது பல பயணங்கள் வெற்றிகரமாகவும் விரைவாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்குச் செல்ல விரும்பும் பெண்கள் (குறிப்பாக மணம் செய்தவர்கள், மணம் செய்யவிருப்பவர்கள்) உங்களை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.

குவைத்துக்கு Airport Cleaners (ஏயார் போட் கிளீனர்ஸ்) ஆக செல்ல விரும்புபவர்கள் நேரடியாக பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவிற்கு விசா அழைப்புக்கு விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்

பல் இல: 764
பலாலி வீதி,
கோண்டாவில்
கிழக்கு.

தொடர்பு:
N. பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில்
கிழக்கு.

★ உங்கள் நன்மை கருதி இவுப் பகுதியில் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது.

★ குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

## 61ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்லையா இராமமூர்த்தி (மூர்த்தி)**

தோற்றம்: 11—03—1955 | உதிர்வு: 10—08—1986

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து ஒளிவீசிக் கொண்டு விளங்கிய தெய்வமே எங்களை எல்லாம் கலங்கித் தவிக்கவிட்டு எங்கு சென்றாய் ஐயா, பொல்லாத காலன் உன்னைச் சொல்லாமல் எடுத்து எம்மைக் கொல்லாமல் கொன்றுவிட்டானே ஐயா. மின்னாமல் முழங்காமல் "ஷெல்" என்னும் இடி வீழ்ந்து விட்டதே எங்கள் தெய்வமே உங்கள் ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக

உங்கள் பிரிவால் கலங்கித் தவிக்கும், மனைவி, பிள்ளைகள், பெற்றோர், உறவினர், நண்பர்கள்,

உமது சக வாழ்க்கைத் துணை உரிமையாளர்களாகிய:

ச நமசிவாயம் (செட்டி)
R அருணகிரிநாதன்
T. திருநாவுக்கரசு
S. ராசன்
S. செல்வரத்தினம்
V. இந்திரநாதன்
T. தாசராசா
V. நாகநாதன்
P. விக்கமூர்த்தி
K புவனேஸ்வரன்

ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல் தருபவர்: ச நமசிவாயம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை, 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியிட்ட திகதி:- 09 — 10 — 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ60N86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org